ஸ்ரீசெந்திலாண்டவன் துணை.

பூமி யாடிமாண்ட பொல்லாங்கோடு

காவேரி கொள்ளடம் பிரளயப் போக்கில்,

சீர்காழி, வைதீஸ்வரன் கோவில், பாகங்களிலும்
அநேக ஊர்கள் தண்ணீரில் மூழ்கிப்போன

வெள்ளப்பிரளய விபரீதச் சிந்து.

இரண்டாம் பதிப்பு



இஃது

விஜயபுரம் வெ. நா. சபாபதி தாசரின்
சிறப்புற்றோன் V. N. S. ஆறுமுககிணைகரால்
இயற்றியதை

மாயவரம் "கமலா பிரஸில்," பதிப்பிக்கப்பெற்றது

ரிஜிஸ்டர்டு 1924 விலை 6 பை.

ஸ்ரீ செந்திலாண்டவன் துணை.

வெண்பா

பொங்கி வெள்ளம் பொன்னிநதி பூந்து பலஊரழி
மங்கிமனுமாண்ட மாவிஷயம்—எங்கிலுமே
மருபாகம்பாட மதயானை மாமுகத்தோன்
இருபாதம் சேவித்திரு

சிந்து பல்லவி.

திருவற்றுபோச்சு தென்னாட்டின் பிர[illegible]
திரமுற்றதாச்சு

அனுபல்லவி.

அருள்பெற்றகாவேரி யானை சேனையுடன்
உருளூற்று நம்நாட்டில் யுத்தம் துவக்கிட (தி)

சரணங்கள்.

1 கணமாய் பிரளயம் கடுமை என்றார்பலர்
காவேரி தீரமே கண்டறிந்தார் சிலர்
இனமாய்நம் பாடலில் இஷ்டமுண்டாருளர்
என்செய்வமென்றுமே ஏங்கினர் பலபலர்
வல்லமைவிண்டார் வருஷ பல்பல
வாக்கியம் கண்டார்

2 நெல்வேலி மதுரையை நீர்மயம் செய்தது
நேரிய் பம்பாய்முனே நெட்டி வளைத்தது

நல்பர்மா சிலபாகம் நாசம்மிகுந்தது
நமாகி பொன்னிநம் நாட்டையழித்தது
கவலைகளாச்சு காவேரி கொள்ளடம்
காலனாய்போச்சு

பிரபவ பிரக்குமுன் பெருந்தவம் செய்யனும்
பெரியோர்முன் விஸ்வாச பிரீதிகளுய்யனும்
அறமுதல் நன்நடை அவரவர்க்கர்கனும்
அடுத்தோரை கெடுத்திடும் ஆண்மை விலக்கனும்
புண்ணியம்வேண்டும் தன்னுயிர்போல் ஜீவ
புனிதமும்வேண்டும்

என்னென்ன விபரீதம் ஏற்குமோ நீடிட
இணையில்லா காவேரி எங்கிலும் சாடிட
சன்ன பின்னலூர ஜனத்திரள் வாடிட
சந்தனமரம் யானை வெள்ளத்தி லோடிட
கன்றுவியாச்சு கணக்கற்ற வெகுபொருள்
காலியாப் போச்சு

காவேரி கொள்ளடம் காலனாய் சாச்சுது
காழிசேர் வடரேங்கம் தேர்காணு போச்சுது
சாவேரியாய் கோவில் தண்ணீரிலாச்சுது
சாகுபடி செய் நிலங்கள் தலைந்தது
அமளியதாச்சு அளவிலா கிராமங்கள்
அமிழ்ந்திடலாச்சு

காந்தி மகானே மகாத்மா என்ற மெட்டு.

திடமறிந்தனரோ காவேரி திமிர்தெரிந்தனரோ

(1) குடகிலுற்ற பெருமழையால் கொந்தளிய காவேரி
தடபுடலாய் பெரும்படவுனை தடவிகுடிகெடுக்க — தி.

(2) ஸ்ரீரெங்கபட்டணத்தை சீர்குலைத்த பிரளயமே
நேரேறுங்க பலவூரை வெட்டிவளவெடுக்க — தி.

(3) ஈரோடிற்கிப்பாலே இருகரை சேர்நகர்களெல்லாம்
வேரோடறுத்து விட்டவேசரியாக ஜனங்கள் — தி.

(4) பவானிநகர் துடியபஞ்சுபெர வீடதெலாம்
சிவாவென் உயிர்மாண்ட ஜீவன் அநேகவகை — தி.

(5) பார்த்தோர் அலறிடவே பரிதாபம் பாராது
தீர்த்தவாரிக்கிரையாய் தெர்ப்பணங்களாகிடவே — தி

(6) அருபத்துநாலு கண்ணும் அத்துவிழ கொள்ளடத்தில்
திருவைநகர் தரகரெலாம் தியங்கி மயங்கிடவே — தி.

(7) வானைக்கா ஸ்ரீரெங்கம் வழிநகர்கள் தூள்பெரவே
ஆனைக்குமண்டாத ஆழமுண்ட றேட்டதெலாம் — தி.

(8) காவேரிபாலம் நடுகணவாய் உடைந்துவிட
பாவேகஜனமதெலாம்பரி சோகான்வரவே — தி.

(9 உத்தமஞ்சேரிப்பாலம் ஊர்நடனே உருண்டிடவே
சத்தம்மிகுக்கஜனம் சாலமரமேரியதும் — தி.

(10) கோவிலடி மூழ்கஜனம் கூக்குரலாய்சத்தமிட
ஆவிபதரலுண்டார் அடங்கா பிரளயத்தால் — தி.

(11) அறவளர்த்தான் ஆலயம் சேர்ஆசி திருவாதிதனில்
தரம்பிரிந்துமுன்னுடி தஞ்சைவந்து சேர்ந்திடவே—தி

(12) பாவநாசத்தில் வெள்ளம்பாய்ந்து ரெயில்போகாது
காவலுற்றபாதைகளை கண்டணங்கள்செய்திடவே—தி

(13) பப்பளிக்ரோட்டுகளை பள்ளம்மடுவாக்கினைய்ய
தப்பவளியில்லாது தயங்கி மயங்கிடவே—தி.

(14) கும்பகோணம்பிர்க்கா கும்பினியார் நாடுகளில்
அன்பதுவர்மேல் ஜலத்தில் ஆன்ந்திஅவதியுர தி.

சீர்காழி தாலூக்காவில் ஏற்பட்டசேதம் முழுகிய ஊர் அகவல்

கார்ஜலம் பொங்கி காவிரி கொள்ளடம்
சீர் அரச்செய்த தீங்கினை அறிவோம்
சீர்காழிசேர்ந்த செல்வநகர்கள்
பேர்வாய் அழிந்த பீதியே பீதி
பூங்குடி மாதலூர் புகழ்வடரெங்கம்
புங்கனூர் சாமியம் புல்லொனுசேதம்
குர்நாபடுகை குத்தக்கரையும்
மருவத்தூரும் மடப்புர மழிந்தது
கோமனுநத்தம் கூர்கிரங்குடி
தேம்மேல்வல்லம் திகைவுரகைக்கால்
சோசியக்குடியுள் துரையூர் அழிந்தது
பாசிநல்வரகுடி பனமங்கலமுடன்

திருக்கழிப்பாலை திகழ் கீழ்பரம்பை
அருந்தூர அழிந்தன ஆனந்தக்கூத்தூர்
சோளம்பேட்டையும் சூழ்ந்தாரூரும்
ஆழஜலமயம் ஆனைக்காசத்திரம்
ஆனைதாண்டவபுரம் ஆழிபோலாச்சு
காணாவைதீஸ்வரன் கமழ்நகர் ஜலமயம்
ரயில்வே லயன்கள் நாசமதாண்ட
வொயில்வெர உப்பனூர் உடைப்புடன் பிரளய
அகணிதென்னங்குடி அரூர் திருநகரி [ம்
தடவியவெள்ளம் தாடகங்கோவிலும்
திட்டை சமுத்திரம் தில்லைவிடங்கனும்
பொட்டெனவடகல்புத்தூர் அமிழ்ந்தன
சித்தமல்லி திருகருகாவூர்
பத்தராக்குடியும் பாய்ந்தன வெள்ளம்
செம்மங்குடியும் சேர்புதுப்பேட்டை
பம்பலாய் பாழே பனங்காட்டங்குடி
வழுத்தையாகுடியும் வாழ்கூத்தியூரும்
வழுத்துவோம் ஜலத்தில் வழக்குடியமிழ்ந்தது
சட்டநாதபுரம் ஜலத்தினிலாச்சு
பெட்டியும் சட்டியும் போச்சுஇவ்வூர்களில்
ஆண்டியூர் நாங்கூர் அனேகமூர்மூழ்கின
வேண்டி எழுதவிடமில்லை விட்டனம்

கும்மிப்பாடல்.

(1) கன்னியிளமயில் கற்பரசிவெள்ள—கன்ருவிதன்னேக் கணக்கெடுக்க — உன்னியோர் ஆண்டுக்குமுன் செல்லு மென்றுமே — ஊரெங்கும் வார்த்தை உலாவுதடி

(2) பொன்னனி யோரம் கடலில் ஏராள — பிணங்கள் மிதப்பதை பார்த்துப்பலர்—தண்ணீரிலோட்டத்தில் தள்ளிவருகிரார் தாங்கொணு கோரம் சகிக்கவொண்ணு

(3) மங்களூர் பந்தரா உப்பனுண்டிதனில் மாகுூ சேர்வெள்ளபது நாயிரம்பேர்—பொங்கிய வெள்ளத்தில் ஆயிரம் பேர் மிச்சம்—பூராய் எட்டாயிரப்பேர்களில்லை.

(4) ஆயதாபாத்திலோர் ஆலைவிழுந்திட — ஆவிவிட்டார்கள் அனேகனன்பர் நேமமிலாமலங் காபத்து மீச்சுது நேர்ந்த ஈசன் கோபம்நிஜயமே

(5) ஆரியங்காவில் மலைகள் அசைந்திட ஆடியபூமி அதர்ச்சியதால் — நேரியசேதப் என் காலகதியதோ — நிஜய மென்றேணிலைநிருத்தும்.

(6) காவேரிதோன்றிய நாள் முதலிவ்வித காலம் வல்லை என காசினியில் நாவேகிறார் சென்ற பாரக்கிழங்களும் நன்னி உரைத்தேநடுங்குகுரார்.

(7) கம்பராமாயணம்மேல் செல்லும் வெள்ளத்தின் காரணம் முற்றும் கழரவென்ருல் ரும்முறையாசபின் பாகமியற்று வேண் மூன்று கால் தந்து முசமலர்வீர்.

(8) அச்சிடும் வேலையில் பேர்பெற்ற தீரநம் அன்பர் திருவேங்கிடநாயுடுகோர் விச்சித்ர சம்யோஷிங் வேணு சோபாலுடன் விர்ப்பனமாக விளக்கவென்றோம்.

(9) சீருடன் எங்கிலும் சிங்கைமகிழ்ரா சீர்த்தியுர புகழும் சிருவன்—ஆறுமுகஇண கன்னிசைபாவதை அன்புடன் பாடி ஆசிகூர்வீர்.

☞ சீர்காழி தாலூக்காவில் ஏற்பட்ட ரெயில்வே உடைப்பை சீர்செய்யமாத்திரம் லெக்ஷத்தி இருபது ஆயிர ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். சொல்ப சேதத்துக்கு இவ்வளவு ரூபாய் செலவானால் மற்றபடி நாடுகள் அழிந்ததில் எத்தனை கோடி நஷ்டமாயிருக்குமென்று தாங்களே யூகித்துக் கொள்ளவும்.

குறிப்பு:—இதற்கு முந்திய முதற்பாகத்தைப் புஸ்தகம் வாங்கி வாசித்து விஷயமரிய பிரார்த்திக்கிறேன்.

என்னாலியற்றிய சில ரிஜிஸ்டரான புஸ்தகங்களை சிலர் மதுரை ஜில்லாவில் திருட்டுத்தனமாய் அச்சிட்டு விற்பதாய் கேள்விப்படுகிறேன், எனது நஷ்டத்திற்கு அவைகளை அச்சிடுவோரும் அச்சிட்டுக் கொடுப்போரும் பாத்தியராக வேண்டுமென்று கண்டிப்பாய் அறியவும்.

இப்படிக்கு
வெ. நா. சபாபதிதாசர் அன்சன்ஸ்,
V. N. S. ஆறுமுக கிணகர்,
சுப்பிரமணியபுரம்
திருப்பரங்குன்றம்ரோடு,
மதுராரடவுன்.